Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 134

யாழ்ப்பாணம் ஆனி 12 ஜ: வ் 2 சனிக்கிழமை (26-6-71)

இதுவரைகாலமும் தட்டுப்பாடாக இருந்த
**இரும்புச் சலாகை**
**இரும்புக் கம்பிகள்**
அரசாங்கக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யும் ஒரே ஒரு ஸ்தாபனம்
**ஸ்டீல்சன்ஸ்**
287-289, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7035

அரசியல் நிர்ணயசபையில்

# "தமிழரசு வெளியேறுவதால் பயன் எதுவும் கிடையாது

## தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யமாட்டோம்"

-பீலிக்ஸ்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கம் தமிழ்மக்கள்மீது இரங்கி, மொழிப்பிரச்சினையை அணுகும்போது தமிழரசுக்கட்சியினர் நாங்கள் அளிக்கும் சலுகையை எங்கள் முகத்திலேயே எறிந்துவிட்டு, வெளியேறுவதினால் பயனெதுவும் பெறப்போவதில்லை! என்று பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இன்று அரசியல் நிர்ணயசபையில் கூறினார்.

அரசியல் நிர்ணயசபையில் 11வது அடிப்படைத்தீர்மானம் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது. தமிழரசுக்கட்சியினர் கொண்டுவந்த திருத்தப்பிரேரணைக்கு திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பதிலளித்துப் பேசுகையிலேயே இவ்வாறு கூறினார்.

0 ஸ்ரீலங்காவின் அரசகரும மொழி 1956ம் ஆண்டின் 33ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சிங்களமொழியாதல் வேண்டும்.

0 தமிழ்மொழி பிரயோகப்படுத்தப்படல் 1958ம் ஆண்டின் 28ம் இலக்க தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு இணங்க இருத்தல்வேண்டும் என்று 11வது அடிப்படைத் தீர்மானம் கூறுகிறது.

'தமிழும் சிங்களமும் எல்லாச்சட்டங்களும் இயற்றப்படும் மொழிகளாயிருத்தல் வேண்டும்' என்ற திருத்தத்தை தமிழரசுக்கட்சி சார்பில் உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம் சமர்ப்பித்தார்.

அப்போது திரு பீலிக்ஸ் பேசியதாவது!

## சரவணையில் கொலை!

### ஒருவர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், சனி

தலையில் தாக்குண்ட நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 3 தினங்களுக்கு முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்த சரவணையைச் சேர்ந்த கந்தையா என்பவர் நேற்றுக் காலமானார்: இவரது மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் பதில் நீதிபதி திரு வி. நடராசா இது ஒரு கொலை எனத் தீர்ப்பளித்தார்.

காலஞ்சென்றவரின் மகள் கற்பகதேவி. மாணிக்கம் ஆகியோரின் சாட்சியமளித்தனர். காலஞ்சென்றவரின் வீட்டுக்கு வந்த சந்தேகநபரான இளைய தம்பி வேலுப்பிள்ளை அல்லது பொன்னுத்துரை என்பவர் 21-ம் திகதி இரவு கந்தையாவை கரியஇரும்பு ஒன்றினால் தாக்கியதாக சாட்சியமளித்தனர். தற்போது பொலிஸ்பாதுகாப்பில் உள்ள பொன்னுத்துரையை தொடர்ந்து 26-ந் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறும். 26-ம் திகதி ஊர்காவற்றுறை

(6ம் பக்கம் பார்க்க)

நல்லூர் ஆசிரியர் பயிற்சி

## கலாசாலையை மூடாதுஇருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மூடாதிருக்க நடவடிக்கை எடுக்கும்படி யாழ். மாநகரசபையில் கொண்டுவந்த தீர்மானம் நேற்று நிறைவேறியது

இவ்விஷயமாக மேயர், கல்வி அமைச்சரை சந்திக்க வேண்டும் என திரு. எஸ். நாகராசா கேட்டுக்கொண்டார்.

திரு. அ. நடராசா கொண்டுவந்த இத் தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது! நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, ஆரம்ப பாடசாலையாக போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது இதனை மூடுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இன்னும் பல பயிற்சிக் கலாசாலைகள் உருவாக்கப்பட வேண்டிய இந் நேரத்தில் பயிற்சிக் கலாசாலைகளை மூடுவது நல்லதல்ல. ஆகவே இக் கலாசாலையை மூடாதிருக்க நடவடிக்கை எடுக்கும்படி கல்வி மந்திரியை இச்சபை கேட்டுக் கொள்கிறது இத் தீர்மானத்தின் பிரதிகளை தபால் தந்தி போக்குவரத்து மந்திரிக்கும் நல்லூர் ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைப்பதென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நீச்சல் தடாகம் எதுவும் இல்லாததால், மாநகரசபை எல்லைக்குள் உள்ள சகலருக்கும் பயன்படக் கூடியதும், நகரின் மத்தியில் அமைந்துள்ளதுமான ஆரியகுளத்தை நீச்சல் தடாகமாக மாற்ற வேண்டும் என்று திரு. ரி கே இராஜரத்தினம் கொண்டுவந்த தீர்மானத்தை ஸ்ரேடியம் கமிட்டிக்கு விடுவதென முடிவு செய்யப்பட்டது.

திரு. கே எஸ். நடராசா கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியது. மின்சாரத்தினால் இயங்கும் மோட்டார் விசைப்பலகை விசிறிப் பட்டிகள், லக்குப் பிப்பாக்கள் 2 அங்குலம் தொடக்கம் அரை அங்குலம் வரை அரிக்கக்கூடிய அரித்தட்டுகள் முதலியனவற்றுடன் கூடிய ஓர் கல்லுடைக்கும் யந்திரம் ஒன்றை வாங்குவதென்று இச்சபை தீர்மானிக்கிறது.

### ஆசிரியர்சங்கம்எதிர்ப்பு

அகில இலங்கையிலும் பயிற்றப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை இருக்கும் இந்நேரத்தில் தமிழ் ஆசிரிய கலாசாலை எதையும் ஒன்று சேர்க்க வேண்டாமென்றும் நல்லூர் ஆசிரிய கலாசாலையை மூட அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையை விட வேண்டுமென்றும் கல்வி மந்திரியையும் வட பிரதேச வித்தியாதிபதியையும் கோரும் தீர்மானமொன்றை அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க யாழ். கிளை தனது நிர்வாக சபைக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

### இன்று

யாழ்ப்பாணம், சனி

இன்று கோண்டைமுனீஸ்வரப்பெருமானுக்கு பஞ்சர அமிர்தாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து அருட்கவி திரு. சீ விநாசித்தம்பியின் 'அம்பலவாணனும் அவனடியாரும்'
[illegible]
பெறும்.

### ஊரடங்கு நேரம்

இரவு 10-00 மணி முதல் காலை 4-00 மணி வரை

## 'வடக்கு கிழக்கில் தமிழ் நீதிமன்றமொழி'

தமிழருக்கு சாதகமான முறையில் அரசியல் அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா நீதிமொழிச்சட்டத்தைதயாரிக்க உடன்பட்டிருக்கிறார் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியை நீதிமன்ற உபயோகத்திற்கு அனுமதிப்பதற்கு சட்டத்திலேயே இடமில்லை. ஆனால் நாங்களும் திரு கொல்வினும் தமிழ்மொழியை அப்பகுதிகளில் நீதிமன்ற மொழியாகக் கொடுக்க தயாராய் உள்ளோம்.

தீவிரவாத நடவடிக்கைகளை எடுத்து, தமிழ் மக்களுக்கும் ஏனையோருக்கும் பிரச்சினையை உண்டாக்காதீர்கள். கடந்தகால இடர்பாடுகளைக் கடந்து, சமரச அடிப்படையில் மொழிப் பிரச்சினைக்கு தீர்வுகாணவுள்ள இச்சந்தர்ப்பத்தில் எமது நடவடிக்கைகளை தூக்கி எறிவதால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை. இதன் மூலம் சட்டத்திலுள்ளவாறு நீதிமன்ற மொழியை அமுல் நடத்தும்படி எங்கள் தீவிரவாதிகள் எங்களிடமே திருப்பிக் கேட்பதற்கு நீங்களே காரணமாகி விடுவீர்கள். தமிழருக்கு செய்யத்தக்க நன்மைகளை நாம் புதிய அரசியல் அமைப்பில் இடம்பெறச் செய்வோம். தமிழரசுக் கட்சியினர் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேற எடுக்கும் நடவடிக்கையினால் பயன் ஏதுவும் ஏற்படாது' என்றார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டின் பேசுகையில், கூறியதாவது:

தமிழுக்கு உத்தியோக மொழி அந்தஸ்து இல்லாதவரை அது வீட்டுமொழியாகவே வந்துவிடும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற மொழி தமிழாகவே இருக்கவேண்டும். இதை காலஞ்சென்ற பிரதமரும் தற்போதைய பிரதமரின் கணவருமான திரு. எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவும், தற்போதைய நிதி அமைச்சருமான டாக்டர் என். எம். பெரேராவும் முன்னர் மொழிப்பிரச்சினை பற்றி தமது கருத்துக்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

2 ஏக்கர் நெற்காணி செம்டியகுறிச்சி பூநகரியில் வீதிக்கும் ஐந்து பிரதான ஸ்தாபனங்களுக்கும் அருகில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். மு. செல்லையா, 18/3, கவாமியார் வீதி, கொழும்புத்துறை
3208

EMI ரேப் றைக்கோடர், மின்சார மேசை விசிறி, கையில் கொண்டு செல்லக்கூடிய மின்னியக்க சிங்கர் தையல் மெஷின், கலோசமரு 35 M. M. விற்பனைக்குண்டு ஈழநாட்டுக்கு முன்னாலுள்ள எஸ். ரி. வி. அன் சன்ஸ் உடன் தொடர்பு கொள்ளவும்.
3211

**காணி:**

நீர்வேலி அரசவீதிக்கு அண்மையில் (விளான்) 15 பரப்பு பயன்படுத்தப்படாத காணி விற்பனைக்குண்டு. V. யோகலிங்கம், கச்சாய் வீதி, சாவகச்சேரி.
2500

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

**வாடகைக்கு**

No. 5 றக்கா வீதியில் 1-7-71 முதல் சகல வசதிகளுடன் கூடிய ஒரு பகுதி வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களை மேற்படி விலாசத்தில் அறிந்துகொள்ளலாம்.
3207

**தேவை**

40 வயதிற்கு மேற்பட்ட குடி வெறி இல்லாத சாந்த குணம் உள்ள றைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். லிங்கம் அன் கோ 21/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
3209

**சங்க நிர்வாகிகள்**

அரியாலை, வெள்ளி

அரியாலை கலைமகள் முற்போக்கு வாலிபர் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எம் ஜி திங்கலநாயகம், உபதலைவர்: வே. க. தங்கராஜா, இணைச்செயலாளர்கள்: இ. அரசகேசரி, இ. வைகுந்தவாசன், தனாதிகாரி: ம. பரிமளசிங்கம்.

ஏ. வீரசிங்கம், ஐ. வரதராசா, செ. செல்வகுமார், நா. திருச்செல்வம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

**ராணி** (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி.ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
# ஜீவநாடி

---

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
முத்துராமன் — லக்ஷ்மி,
நாகேஷ் — ராகினி
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை 5.30 நடித்த
# நவக்கிரகம்

---

யாழ்ப்பாணம்
**வின்ஸர்** — காலை 10-30 பி.ப.2-00 மாலை 5-30
ஜி.என். பாலசுப்பிரமணியம்
எம். எஸ். சுப்புலக்ஷ்மி
கிருஷ்ணன் - மதுரம் - துரைராஜ்
நடித்த
# சகுந்தலை

---

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜி கணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
# பாசமலர்

---

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா குமாரி சச்சு
நடித்த
# நிறைகுடம்

---

**கிளிநொச்சிப் பட்டண சபை**

**கேள்வி விளம்பரம்**

கிளிநொச்சிச் சந்தையில் நான்கு திறந்த கொட்டகைகள் அமைப்பதற்கு சீல் வைத்த தனித்தனி கேள்விகள் அற்காக வழங்கப்படும் பத்திரங்களில் 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 5-ம் திகதி முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் கிளிநொச்சிப் பட்டண சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சு. முருகேசு,
தலைவர்,
பட்டண சபை,
கிளிநொச்சி.

பட்டண சபை அலுவலகம்,
கிளிநொச்சி,
23-6-71.
2867

## இந்த இடங்களில் ரயில் நிற்காதாம்

எழுதுமட்டுவாள், வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து காலை பத்தரை மணிக்கு கண்டிக்குச் சென்று திரும்பும் புகையிரதம் மறவன்புலோ, சாவகச்சேரி ஆஸ்பத்திரி, புத்தூர் சந்தி, பளைமுயவாய்க்கால், முகமாலை, வேம்பேடுகேணி முதலிய இடங்களில் இதுவரை காலமும் தரித்துச்சென்றது. இனிமேல் இவ்விடங்களில் மேற்படி புகையிரதம் தரித்துச் செல்லாதென புகையிரதப்பகுதி அறிவித்துள்ளது.

---

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 5-30
சிவாஜி—பானுமதி
நடித்த
# அறிவாளி

---

**நாகம்ஸ்சினிமா**
சுன்னாகம்
தினசரி பி. ப. 2-00, 5-45
நாகேஷ்-சௌகார் ஜானகி
நடித்த
கே. பாலச்சந்தரின்
# நீர்க்குமிழி
காலை 10-30 காட்சி
James Mason
in
TIARA TAHITI

---

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
# கண்ணன் என் காதலன்

---

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி பி.ப 2 30, 5-30
எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
# சக்கரவர்த்தித் திருமகள்

---

**றீகல்** — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி.ப. 2-30
சிவாஜி-ஜமுனா-கண்ணாம்பா
நடித்த
# மருதநாட்டு வீரன்
Daily at 6-00 p. m
Burt Lancaster
in
SCALPHUNTERS
(Color)

---

## பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடத்தலாம்

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்திலுள்ள கல்லூரிகளில் வருடாந்த விளையாட்டுப்போட்டி நடத்துவதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லையென வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் நேற்று மூன்தினம் வடமாநில வித்தியாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

தற்பொழுதுள்ள நிலைமையில் கல்லூரிகளில் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடத்தலாமா என வடபகுதியைச் சேர்ந்த கல்லூரி அதிபர்கள் ஆலோசனை கேட்டிருந்தார்கள் இதற்கு அனுப்பப்பட்ட பதிலில் பொலிஸ் அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே சில கல்லூரிகளுக்கு வருடாந்த விளையாட்டுப்போட்டி நடாத்தப் பொலிஸார் அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது;

......

## 2வது தடவையும் கேடயம் பெற்றது

வேலணை, வெள்ளி

வேலணை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய திருமதி அன்னம் வாதலூரர் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்கான கிளித்தட்டுச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் வேலணை செட்டிபுலம் சனசமூகநிலையம் திருவள்ளுவர் சனசமூக நிலையத்திலும் பார்க்க 10 வழுக்களைக் கூடுதலாகப் பெற்றுக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இக் கேடயத்தைச் செட்டிபுலம் சனசமூகநிலையம் இரண்டாவது முறையாகச் சுவீகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 26—6—71**

**344 மீ. அல்லது 61 மீ.**

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கிறிஸ்தவநற்சிந்தனை 6-20 ததிப்பாடல்கள், 7-00 மெல்லிசை. 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அல்லது 49 மீ.**

பகல் 12-00 நண்பகல் இசை, 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ. அல்லது 61 மீ.**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர்விருந்து, 5-45 கல்விச் சேவை.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 முத்திநெறி, 6-30 பெண்ணுலகம், 7-00 தமிழ் மூலம் சிங்களம், 7-15 உரைநிகழ்ச்சி, 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசை அரங்கு, 10-30 செய்தித் தொகுப்பு.

## ஆலய பரிபாலனசபை

ஊரதீவு, வெள்ளி

புங்குடுதீவிலுள்ள ஊரதீவு பாணாவிடைச் சிவன்கோவில் பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஆலயமுன்றலில் ஆசிரியமணி திரு செ. இரகுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பொதுப்பிரதிநிதி- க. கு. மதியாபரணம், தலைவர்: ஆசிரியமணி செ. இரகுப்பிள்ளை, செயலாளர்: ந. இராசதுரை. பொருளாளர்: ஆ. ப. பாலசுப்பிரமணியம், உபதலைவர்கள்: வ. வே. இளையதம்பி, இ. பொன்னம்பலம். கணக்காய்வாளர்: க. மகேந்திரன் உப செயலாளர்: பொ. வைத்திலிங்கம். உப பொருளாளர் மு. இ. இராமலிங்கசர்மா காப்பாளர்கள்: இ. தம்பிஐயா க. ஆறுமுகம் ம. பாலசிங்கம் 16பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

இவ்வாலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 13-ம் திகதி ஆரம்பமாகி 22-ந் திகதி தீர்த்தோற்சவத்துடன் முடிவடைந்தது.

20-ந் திகதி வேட்டைத் திருவிழாவும் 21-ம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெற்றதுடன் அவ்விரு தினங்களிலும் அன்னதானமும் நடைபெற்றது.

---

## ஊர்காவற்றுறை ஒளிமயமானது

ஊரதீவு, வெள்ளி

ஊர்காவற்றுறைப் பட்டினசபை எல்லைக்குள் மின்சார ஒளிபரவிவிட்டது.

ஆரம்பவிழா எதுவுமின்றி இம்மாதம் 17-ம் திகதி தொடக்கம் மின்சார விநியோகம் நடைபெற்றுவருகிறது.

தற்போது வேலணை நாரந்தனை புங்குடுதீவு ஆகியபகுதிகளுக்குரிய மின் இணைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

இதற்கான நிதி கடந்த அரசாங்கத்தால் முன்னாள் எம். பி. திரு. வ. நவரத்தினம் முயற்சியின் பேரில் ஒதுக்கப்பட்டது. நிதியின் தொகைஇரண்டரை இலட்சமாகும்.

---

இரத்தினக்கல்
கூ. ஸ்தாபனம்

## திரு: இராஜேந்திரா தலைவர்

கோட்டை, வெள்ளி

அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத் தலைவராக முன்னாள் திறைசேரித் தலைவர் திரு மு. இராஜேந்திரா நியமனஞ் செய்யப்பட்டுள்ளார்.

---

"யங் ஹாட்ஸ்"
விளையாட்டுக் கழகம்
விரைவில் ஆரம்பம்
'ரொம்பொலகேம்ஸ்'
தினசரி வேளைகள்
பி. ப. 4-30 முதல்
இரவு 8-30 வரை
புதிய அங்கத்தவர்கள்
சேர்க்கப்படுவர்
# பல்மேரு கொற்றேஜ்
85, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்

YOUNG HEARTS
SPORTS CLUB
Commencing shortly
Daily sessions
of
TOMBOLA GAMES
from
4-30 P.M —8-30 P.M.
MEMBERSHIP
Open
for New Members
PALMYRA COTTAGE
85, Main Street,
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிலிருந்து மேலும் ஒரு கப்பல் பாகிஸ்தானுக்குப் புறப்பட்டது

## இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதிபற்றி அமெரிக்க அரசு விளக்கம்

நியூயோர்க், ஜூன் 25 மூன்றாவது கப்பல் ஒன்றும் நியூயோர்க்கை விட்டு பாகிஸ்தானுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளதாக அமெரிக்க இராஜாங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் இந்தக் கப்பலில் ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுகின்றனவா என்பதைத் தன்னால் ஊர்ஜிதம் செய்யமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குமுன்பாக அமெரிக்க ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு இரு பாகிஸ்தானியக் கப்பல்கள் பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளன. அமெரிக்காவின் இந்த ஆயுதக் கொடுப்பனவு இந்தியாவுக்கு அமெரிக்கா கொடுத்த வாக்குறுதியை மீறுவதோடு கிழக்குப் பாகிஸ்தானில் தொடர்ந்தும் இனக்கொலை நடப்பதற்குக் காரணமாகும் என இந்தியா ஆட்சேபம் தெரிவித்திருந்ததும், ஆயுதங்களை ஏற்றிவரும் கப்பல்களை இந்தியா வழிமறிக்கவேண்டுமென இந்திய லோகசபையில் அங்கத்தவர்கள் வலியுறுத்தியதும் தெரிந்ததே.

மார்ச்மாதம் 31-ம் திகதியும் ஏப்பிரல் 6-ம் திகதியும் பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது என்றும் மார்ச் மாதம் 25ம் திகதி பாகிஸ்தானுக்கான அமெரிக்க உதவி துண்டிக்கப்படும் முடிவு எடுக்கப்பட்டபொழுதிலும் அது அமுலாக்குவதற்கு முன்பாக இந்த லைசென்சுகள் வழங்கப்பட்டுவிட்டன என்றும் இது பற்றி வெளியுறவு இலாகா பரிசோதனை நடத்தும் என்றும் இராஜாங்க இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### அமெரிக்க உதவி அதிகரிப்பு

இந்தியா வந்திருக்கும் அகதிகளுக்கு மேலும் உதவியாக 7 கோடி டாலரை (சுமார் 52 1/2 கோடி ரூபா) ஒதுக்கியுள்ளதென அமைச்சர் ரோஜர்ஸ் தெரிவித்தார். இதற்கு முன்பாக 2 கோடி டாலர் (சுமார் 15 1/2 கோடி ரூபா) நிதி உதவியை அமெரிக்கா அளித்திருந்தது.

### குல்கர்னி வேண்டுகோள்

பாகிஸ்தான் கப்பல் சரக்குகளை இறக்குமதி செய்ய வேண்டாமென இந்திய துறைமுக இறக்குமதியாளர் சம்மேளனத் தலைவர் திரு. குல்கர்னி அமெரிக்க துறைமுக இறக்குமதியாளர் சம்மேளனத்திற்கு தந்திமூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

பிரிட்டனில்

## குடியேறும் மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதி

லண்டன், ஜூன். 25 தம் நாட்டை விட்டு பிரிட்டனுக்கு வந்து குடியேறியுள்ள மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்க பிரிட்டனிலுள்ள இருபத்தொரு வர்த்தக ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன. இவற்றுள் சர்வதேசப் பிரபல்யம் பெற்ற 'மோர்கனைட் கார்பன் லிமிட்டெட்', 'இன்டநஷனல் கம்பியூட்டர்ஸ் லிமிடெட்' போன்ற ஸ்தாபனங்களும் சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

குடியேற்றவாசிகளின் திறமைகளையும் அனுபவங்களையும் கணிப்பிட்டு, அதற்கேற்றவகையில் சகல இனத்தவரும் வேலைகள் பெறுவதற்கு இக்கம்பனிகள் உதவப்போகின்றன.

பிரிட்டனில் குடியேறிய மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் இத்திட்டத்திற்கு பிரிட்டனின் வேலைவாய்ப்பு இலாகா வருடம் ஒன்றிற்கு 1,000 பவுண்களென மூன்று வருடங்களுக்கு நிதியுதவி அளிக்கத் தீர்மானித்துள்ளது.

இத்திட்டம் பற்றி இனஉறவு அதிகாரியான திரு. சார்ல்ஸ் பொக்ஸர் கூறுவதாவது: பிரிட்டனில் குடியேற வரும் மக்களின் முக்கிய நோக்கம் நல்ல வேலைகளைப் பெறுவதே. இதுவே அவர்களது முக்கிய பிரச்சினையுமாகும். எனவே குடியிருப்பு, சமூக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் பார்க்க சிறந்த வேலை வாய்ப்புக்களை இம்மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே எமது பிரதான நோக்கம்.

# குழந்தைகளை மேலே எறிந்து துப்பாக்கிமுனையில் ஏந்தினராம்

## கிழக்குப் பாகிஸ்தான் ராணுவ அட்டூழியம் பற்றி யு. எஸ். நிருபர்

நியூயோர்க், ஜூன், 25 கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற கொடுமை போல இரண்டாம் மகா யுத்தத்தின் பொழுதுகூட நடைபெறவில்லை என 'நியூஸ் வீக்' என்ற சஞ்சிகையில் 'திக்காகானின் இரத்தவெறி' என்ற கட்டுரையில் லிண்டன் என்ற நிருபர் தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்களை இந்தியா மிகைப்படுத்திக் கூறுவதாக தான் முதலில் நம்பியதாகவும், ஆனால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும், இந்தியாவிலுள்ள அகதிகள் முகாம்களுக்கும் சென்று பார்வையிட்டபின் கிழக்குப் பாகிஸ்தான் நிலைமைகளை இந்தியா குறைவாக வே மதிப்பிட்டிருப்பதாகத் தான் கருதுவதாகவும் அவர் எழுதியுள்ளார்.

### ஒப்பிடமுடியாத கொடுமை

இந்தியாவிலுள்ள அகதிகள் முகாமில் குண்டடிபட்டவர்களையும், வெட்டப்பட்டவர்களையும், பச்சிளங் குழந்தைகளின் முதுகுகளில் ஏற்பட்டுள்ள கத்திக்காயங்களையும் தான் பார்த்த பொழுது, தனது கண்ணீரையும், துன்பத்தையும் அடக்கிக்கொள்ள மிகவும் பிரயத்தனம் எடுத்ததாகவும் கூறும் அந்நிருபர், இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பொழுதாம் படைமுனையில் சேவை புரிந்ததாகவும் அப்பொழுது மிகவும் கொடுமைமிகுந்த பிரான்சில் நடைபெற்ற கொலைக்களத்தைத்தான் நேரில் பார்த்ததாகவும் ஆனால் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற கொடுமையை எவற்றுடனும் ஒப்பிட முடியாததாக விருப்பதாகவும் எழுதியுள்ளார்.

பாகிஸ்தானியத் துருப்புகள் பச்சிளங் குழந்தைகளை வானத்தில் தூக்கி எறிந்துவிட்டு, அக் குழந்தைகளை துப்பாக்கி முனையிலுள்ள கத்திகளில் ஏந்தினார்கள், என்றும் பெண்கள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள் என்றும் 20 வருடம் கிழக்குப் பாகிஸ்தானில் வாழ்ந்த மதகுரு ஒருவர் தன்னிடம் தெரிவித்ததாகவும் அதில் அவர் தெரிவித்துள்ளதோடு இவ்வித செயல்களுக்கு கிழப்பாகிஸ்தான் இராணுவ கவர்னர் திக்காகானுக்கு இரத்தவெறி பிடித்திருக்க வேண்டும் எனவும் எழுதியுள்ளார்.

## அமைதியை ஏற்படுத்த யாஹ்யாகானால் முடியுமா?

### பிரிட்டிஷ் மந்திரி சந்தேகம்

லண்டன், ஜூன் 25 கிழக்குப் பாகிஸ்தானில் அரசியல் தீர்வொன்றை பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகானால் ஏற்படுத்த முடியுமா என்பது சந்தேகமே என பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் டக்ளஸ் ஹியூம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

திரு. ஹியூம் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார். கிழக்குப் பாகிஸ்தானில் மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டு அங்கு அமைதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதே பிரிட்டனின் விருப்பம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் காமன்வெல்த் பத்திரிகையாளர் கிழக்குப் பாகிஸ்தான் நிலைமையை நேரில் சென்று பார்வையிடவேண்டுமென இந்தியா கேட்டுக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

......

### திருவிழா

சுழிபுரம், வெள்ளி வழக்கம்பரை மகாமாரியம்மன் வருடாந்த உற்சவம் இம்மாதம் 28-ம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. ஜூலை 7-ம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும்.

### தீர்மானம்

வேலணை, வெள்ளி வேலணை ஆரம்ப ப. நோ. கூ. சங்க நிர்வாக நெறியாளர் திரு சண்முகரெத்தினம் காலமானதால் இவரது இடத்துக்கு திரு. ஆர். யேசுதாசனை நியமிக்க நெறிக்குழு தீர்மானித்துள்ளது.

## இந்த வயலின் விலை 84 ஆயிரம் பவுண்!

லண்டன், ஜூன், 22 சுமார் நூறு வருடங்களாக ஸ்பானிய நாட்டில் ஒரு வீட்டின் மாடி அறையில் தேடுவாரற்றுக் கிடந்த ஒரு வயலின் வாத்தியம் சமீபத்தில் லண்டனில் 84,000 பவுண்களுக்கு விற்கப்பட்டிருக்கிறது உலகில் இதுவே முதற் தடவையாக ஒரு இசைக்கருவிக்கு இத்தகைய பெருந்தொகை கிடைத்திருக்கிறது.

இத்தாலியில் ஒரு பாகமான லொம்பாடியில் 1721-ம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த வயலினை விலையம் ஹில் அன்ட் சன்ஸ் கம்பனி வாங்கியுள்ளது.

இந்த வயலினை சுமார் ...

தஸ்தாவேஜு விவகாரம்

## கட்டுரைகள் வெளியிட அனுமதி

நியூயோர்க், ஜூன் 24 வியட்னாம் போரில் அமெரிக்காவின் ஈடுபாடுபற்றிய இரகசிய தஸ்தாவேஜு பற்றிய கட்டுரைகளை நியூயோர்க் டைம்ஸ் தொடர்ந்து வெளியிடலாமென அமெரிக்க சமஷ்டி அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆனாலும் மிகவும் ரகசியமானவை உணர்ச்சியைத் தூண்டுபவை என்று அரசாங்கம் கருதும் பகுதிகளை அப்பத்திரிகை வெளியிடக்கூடாதென அப்பீல்மன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியா

## இராமாயண விழாவில் இலங்கை கலந்துகொள்ளும்

கோட்டை, வெள்ளி இந்தோனேஷியாவில் முதல்முறையாக நடைபெறவிருக்கும் சர்வதேச ராமாயண விழாவில் இலங்கையின் நாட்டியக் கலைஞர்களும் கலந்துகொள்வார்கள் எட்டு நாடுகளைச் சேர்ந்த நாட்டியக் கலைஞர்கள் இவ்விழாவில் கலந்துகொள்கின்றனர்.

இவ்விழா ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி தொடக்கம் செப்டம்பர் நடுப்பகுதிவரை ஜாவா பாலி ஆகிய தீவுகளில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் இலங்கை கம்போடியா இந்தியா பர்மா தாய்லாந்து மலேஷியா போன்ற நாடுகள் கலந்துகொள்கின்றன.

## தன் உயிரை துச்சமாக மதித்தார்

கோட்டை, வெள்ளி 'என்னைப் பற்றி யோசிக்க வேண்டாம்! மக்களைக்காக்க பயங்கரவாதிகளின் நாசகார வேலைகளை முறியடிக்க முன்னேறிச் செல்லுங்கள், என்னுடைய சாவைப்பற்றிச் சிறிதும் கலங்கவேண்டாம்.'

இங்கினிபிட்டியா காட்டில் பயங்கரவாதிகளினால் சுடப்பட்டு படுகாயமுற்று மரமான ராணுவத்தொண்டர் குழுவின் தலைவர் திரு. எஸ் ஜி பத்திரான தமது மரணத்தருவாயிலும் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கினிபிட்டியா காட்டில் ஒளிந்திருந்த பயங்கரவாதிகளைக் கைது செய்யச் சென்ற சமயத்தில் திரு. பத்திரானா சுடப்பட்டார். இருந்தபோதிலும் எட்டு ராணுவத்தினர் கொண்ட இக்குழு 3 பெண்கள் உட்பட 17 பயங்கரவாதிகளை கைதுசெய்தது.

ஆன் பிளன்கி சிமாட்டி என்ற ஆங்கிலமாது 200 பவுண்களுக்கு வாங்கிவைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புள்ளி விபரம் அடங்கிய விபரக் கொத்து

கோட்டை, வெள்ளி பொருளாதார புள்ளி விபரங்கள் அடங்கிய விபரக் கொத்தொன்றை ஜனக்கணிப்பு புள்ளி விபரத்திணைக்களம் வெளியிட்டுள்ளது. இந்நூலை ஜனக்கணிப்பு புள்ளி விபரத்திணைக்கள உதவி இயக்குநர் திருமதி ஐ. கன்னையா தொகுத்துள்ளார்.

சாதாரணமக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட இந்நூல் பல்கலைக்கழக புவியியல்சரித்திர சமூகவியல் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. வரைபடங்களுடன் நாட்டின் பொருளாதாரம் மக்கள் தொகை கனிவளங்கள் ஆறுகள் விவசாயம் மீன்பிடி வீதிப் போக்குவரத்துக்கள் பற்றிய சகல விபரங்களும் அடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாலிபர்களே அன்பு செய்யுங்கள்"

— அதி வந். துணை ஆயர்

தாவடி, வெள்ளி

"அன்பு இல்லாத உள்ளத்திலே அறிவு இருக்காது. அருளும் அழகும் இரா. அங்கே ஆண்டவனும் விரும்பி உறைந்திருக்க மாட்டான். தாழ்மையிருக்குமிடத்திலேதான் அன்பு வளரும். அந்த அன்பிலே தான் இன்பமுண்டு. எனவே வாலிபர்களே அன்புசெய்யுங்கள், அதிலே நல்லறிவு பெருகும். அருள் சிறக்கும் அதுவே இறைவனுமாகும்"

இவ்வாறு மானிப்பாய் புனித அந்தோனியார் கோவில் திருவிழா, திவ்ய நற்கருணை, ஆசீர்வாத வைபவங்களின் போது உரையாற்றிய யாழ் துணை ஆயர் அதி. வந். எல். ஆர். அன்ரனி கூறினார்.

'பிறரிடம் இறைவனைப் பார்க்கலாம் என்றனர் பெரியார்கள். ஆதலால் பிறர் மீது நாம் அன்பு காட்டவேண்டும். தாயை கித் தந்தையுமானவரான இறைவனை அன்புகொண்டாடினால் அடையலாம்' என்று துணை ஆயர் சொன்னார்.

## காலரா தடுப்பூஊசி

சோட்டை, வெள்ளி

எல்லா துறைமுகத் தொழிலாளர்களும் காலரா நோயிலிருந்து பாதுகாக்கப் படவேண்டுமென சுகாதார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

சகல துறைமுகங்களிலும் ஏறக்குறைய 35,000 தொழிலாளர்கள் உள்ளனர் என்றும் இவர்களுக்கு காலரா நோய் தடுப்பு ஊசி மருந்து சகல துறைமுக சுகாதார அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது என்றும், உடனடியாக இந்தத் தடுப்பு ஊசி மருந்துகளை தொழிலாளர்களுக்கு ஏற்ற வேண்டுமென சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

## விநாயகர் புராணம்

மாவிட்டபுரம், வெள்ளி

கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் "விநாயகர் புராணம்" என்ற விடயம் பற்றி சமய வித்தகர் வ. குகசர்மா தொடர்ந்து உரையாற்றிவருகிறார்.

பெருந்தொகையான மக்கள் இச்சொற்பொழிவைக் கேட்டு பயன் அடைந்து வருகிறார்கள்.

......

## 10 பேர் போட்டி

தாவடி, வெள்ளி

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். கிளை ஆலோசனைக்குழுவில் அங்கம் வகிப்பதற்குப் பதின்மர் போட்டியிடுகிறார்கள். இதில் ஐவரே தெரிவுசெய்யப்படுவர். இம்மாதம் 28-ந் திகதி இத்தேர்தல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டுத்தாபனத்தின் தலைமைப் பீடத்திலிருந்து உத்தியோகத்தர்களும் விஜயஞ்செய்து தேர்தலை நடாத்துவார்களெனத் தெரியவருகிறது.

## 'தோற்றவர் மனச்சோர்வு அடையக்கூடாது'

அல்லைப்பிட்டி, வெள்ளி

"தினமும் வேலைசெய்து சோர்வுற்று களைத்திருக்கும் உடலுக்கு இப்படிப்பட்ட விளையாட்டுப் போட்டிகளையும் விழாவினையும் காணும் போது மனச்சாந்தி ஏற்படவாய்ப்புண்டு. வருடத்தில் ஒருநாள் இவ்விழாவினை பெருவிழாவாக கொண்டாடும் ஐக்கியவிளையாட்டுக் கழகத்தினரின் சாதனை போற்றத்தக்கது"

இவ்வாறு வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட விளையாட்டு விழாவின்போது கலந்துகொண்டு உரையாற்றிய ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. செ. இராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு கா. பொ. இரத்தினம் மேலும் பேசுகையில், விளையாட்டுப் போட்டிகளில் தோற்றவர்கள் மனச்சோர்வு அடையக் கூடாது. தோல்வி தான் வாழ்க்கையில் வெற்றிக்கு அறிகுறியென்பதனை உணர வேண்டும் எதிலும் தோற்றவர்கள் மீண்டும் மீண்டும் முயன்றால் வெற்றியடையலாம்.

விளையாட்டுப்போட்டியின் போது பல்வேறு இனமக்கள் ஒன்று சேரும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதுமட்டுமல்லாமல் விளையாட்டுக்களின் மூலம் உடல் வலிமையையும் மனவலிமையையும் பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

இவ்விழாவில் வேலணை கிராமசபை உறுப்பினர்கள் திரு. கா. இராசதுரை, திரு. மு. ஆறுமுகம் ஜே. பி; தீவுப்பகுதி உடற்பயிற்சி அதிகாரி திரு பி பொன்னுச்சாமி, டாக்டர் வே கந்தசாமி திரு கே வீ கே திரு லோகமூர்த்தி உட்பட பலர் பேசினர்.

## பாராட்டு விழா

மாவிட்டபுரம், வெள்ளி

மாவை அருள்நெறி மன்றத்தின் ஆதரவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு பாராட்டுவிழா ஒன்று இம்மாதம் 30-ம் திகதி நிகழ இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இப்பாராட்டு வைபவத்திற்கு கரமுகவர் திரு. அம்பிரட்துரையப்பா தலைமை தாங்குவார்.

......

## நடவடிக்கை

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராம சபைப் பகுதியிலுள்ள வரி செலுத்தாத துவிச்சக்கரவண்டி சொந்தக்காரர்களுக்கு எதிராக சுழிபுரம் கிராமசபை வழக்குத்தொடருவதற்கான இறுதி அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

—...

## பட்டமளிப்பு விழா

மாவிட்டபுரம், வெள்ளி

அகில இலங்கை சைவப் புலவர் சங்க வருடாந்த பட்டமளிப்பு விழாவை ஆகஸ்ட் மாதம் 30-ம், 31ம் திகதிகளில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அகில இலங்கை சைவப் புலவர் சங்க கூட்டமொன்று சமீபத்தில் நடைபெற்ற போது சங்கம் வருடா வருடம் நடத்தும் பட்டமளிப்பு விழாவை ஆகஸ்ட் 30ம் 31ம் திகதிகளில் வேலணையில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

இவ்விழாவில் இளவாலையைச் சேர்ந்த திரு கார்த்திகேசுவுக்கு 'சைவ பூஷணம்' என்னும் பட்டமும், புங்குடுதீவு சித்தாந்த செம்மல் க. கணபதிப்பிள்ளைக்கு சித்தாந்த வித்தகம் என்ற பட்டமும் அளிக்கப்படவுள்ளது.

## 'அவர் மறைந்தாலும் பா ஒலிக்கும்'

தாவடி, வெள்ளி

"தித்திக்கும் செந்தமிழைத் தேனூறும் நயம் கலந்து சிந்தித்துணர வைக்கும் சீரிய கவிகள் பல யாத்து நாம் சுவைக்கப்படைத்த பெருங்கவிஞர் 'மகாகவி' அன்னாருடைய 'கண்மணியாள் கதை' 'சோடை' என்பன அவர் கவித்திறனைப் பறைசாற்றி நிற்கும் அவர் மறைந்தாலும் அவரது கவிகள் நம் செவிகளிலே என்றும் ஒலித்துக் கொண்டேயிருக்கும்"

தாவடி காந்தி கலைவளர்ச்சி மன்றத்தின் தலைவர் கலைச் செல்வன் திரு எஸ் எஸ் சண்முகநாதன் காலஞ்சென்ற கவிஞர் மகாகவியின் மறைவு குறித்து மேற்படி மன்றத்தில் நடத்திய அனுதாபக்கூட்டத்தில் பேசும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

தமிழில், தமிழிசையில், நாடகத்தில் அளப்பரிய பற்றுடையவர் மகாகவி என்று அவர் சொன்னார்

## 'அவர் கவிதைகளை நூலாக்குவோம்'

யாழ்ப்பாணம், சனி

'மறுமலர்ச்சிக் காலம் ஈழத்துக்கு அளித்த கவிஞர் "மகாகவி" அமரராகிவிட்டார். கவிதையையே வாழ்க்கையின் மூச்சாகக்கொண்ட ஒளி மறைந்துவிட்டது. சமூக ஊழல்களைச் சாடிய கவிஞரின் வெளிவராத கவிதைகளை நூலுருவாக்குவதே நாம் அவருக்குச் செய்யவேண்டிய இறுதி மரியாதையாகும். கவிஞரின் ஆத்மா சாந்தியடைவதாக' என்று தெல்லிப்பளை அம்பனை கலைப்பெருமன்றம் 'மஹாகவி' மறைவு குறித்துத் தெரிவித்த அனுதாபச் செய்தியில் குறிப்பிடுகின்றது.

# வீட்டில் கடத்தல் சேலைகள் திடீர் சோதனையில் அகப்பட்டன

மாவிட்டபுரம், வெள்ளி

வீட்டில் திடீர் சோதனை நடாத்திய பொலிசார் கடத்தல் பொருள்கள் எனக்கருதி சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள் கைப்பற்றினார்கள்.

வல்வெட்டித்துறையில் பொலிசாருக்கு இடைத்த இரகசிய தகவலின் பேரில் பொலிஸ் கோஷ்டி ஒன்று உருப்பராயிலுள்ள வீடு ஒன்றில் திடீர் சோதனை நடாத்தியது அங்கு கடத்தப்பட்டதாகக் கருதப்படும் 30 ஆயிரம் ரூபா பெறுமதிவான வேட்டி சேலை உட்பட மற்றும் பல பொருட்களையும் கைப்பற்றினார்கள்.

பொருட்களையும், இது குறித்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களையும் சுங்கப் பகுதியினரிடம் பொலிசார் ஒப்படைத்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

## காரில் கடத்தல் பொருள்

வீதியால் சென்ற காரைச் சந்தேகத்தின் பேரில் சோதனை நடாத்திய பொலிசாரிடம் கடத்தல் பொருட்கள் அகப்பட்டதாம்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி. ராஜேஸ்வரன் தலைமையில் ஒரு கோஷ்டி புன்னாலைக்கட்டுவன் வீதியால் வரும் சமயம் சந்தேகத்தின் பேரில் ஒருகாரை மறித்து சோதனையிட்டது. சோதனையின் போது சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான சேட், சாரம் உட்பட மற்றும் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இப்பொருட்கள் கடத்தப்பட்டதாகக் கருதிய பொலிசார் இருவரைக்கைது செய்து விசாரணை நடாத்தியபின் பொருள்களையும், இரு நபரையும் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

......

## கரபந்தாட்டம்

சுழிபுரம், வெள்ளி

விளையாட்டு அமைச்சின் உதவியுடன் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றச் சங்கத்தினர் சிவன் கோவில் முன்றலில் கரபந்தாட்டத்தை ஆரம்பித்துள்ளனர். வட்டுக்கோட்டை கிராம சபைத் தலைவர் திரு. எஸ். நிற்சிங்கம் விளையாட்டை ஆரம்பித்துவைத்தார் விளையாட்டுப் போதனாசிரியர் திரு. இ. சுப்பிரமணியமும் ஆரம்பவைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

0 0 0

வட்டுக்கோட்டைக் கிராம சபையின் விளையாட்டுமைதானத்தில் வட்டுக்கோட்டை வை. எம். ஏச் ஏ. இயக்கத்தினர் கரபந்தாட்ட விளையாட்டை ஆரம்பித்துள்ளனர் வட்டுக்கோட்டை கிராம சபைத் தலைவர் விளையாட்டை ஆரம்பித்துவைத்தார் சங்கரத்தை வீதியிலுள்ள இவ்விளையாட்டு மைதானம் அண்மையில்தான் திருத்தியமைக்கப்பட்டது.

## ஆண்டுவிழா

பருத்தித்துறை, வெள்ளி

துன்னாலை தெற்குக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆண்டுவிழா ஜுலை 13-ம் திகதி நடக்கவிருக்கிறது. இதில் உடுப்பிட்டி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. க. ஜெயக்கொடி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிறார்.


இதோ! புதிய

பொலித்தியோன் ஈ.சி. 100%

(பெனிட்ரோதயோன் 100%)


BAYER

இந்தப் பெயரை மறவாதீர்கள்!
எந்தப் பயிருக்கும் ஏற்ற பாதுகாப்பு இதுவே!

நெல்லைப் பாதிக்கும் நெற் சந்துக்குத்தி, தத்துக்கிளி, கொப்புள ஈ, நெல் ஈ, பனிப்பூச்சி, ஐங்கோண மூட்டுப் பூச்சி, இலையரிப்புழுக்களையும்,

அன்னுசியைப் பாதிக்கும் மீலிபக்ஸ் புழுவையும் புகையிலை, காய்கறி, வெங்காயம், பருத்தியைப் பாதிக்கும் எல்லாப் பூச்சி புழுக்களையும் அழிக்க வல்லது பொலித்தியோன்.

பொலித்தியோன் ஈ.சி. 100% அதி வன்மை வாய்ந்தது. மிகவும் சிக்கனமானது.




2 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 4 அவு. பெனிட்ரோதயோன் 50%
4 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 8 " "
8 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 16 " "

பொலித்தியோன் ஒரு பேயர் தயாரிப்பு, நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பணலாபம் பெறப் பாவியுங்கள் பேயர் பீடை நாசினிகள்.

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘மனவளர்ச்சி வகுப்பறையில் மட்டும் ஏற்படுவதல்ல’

யாழ்ப்பாணம், சனி

“சராசரி திறமையான ஒரு மாணவனை உருவாக்குவதற்குக் கல்வித்துறையில் புதிய கருத்துகள், புதிய முறைகள் ஆகியவற்றைப் புகுத்துவதற்குக் கூடிய வாய்ப்பு தனியார் பாடசாலைகளுக்கு உண்டு. ஒரு பாடசாலையின் மதிப்பு அது உருவாக்கும் சராசரித் திறமையான மாணவரின் அளவிலேயே தங்கியுள்ளது.”

சென். ஜோன்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கைத் திருச்சபை மிஷனரி சங்கத்தின் செயலாளர் வண. பீற்றர் வோகன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

“வகுப்பறையில் மாத்திரம் மன வளர்ச்சி ஏற்படுவதல்ல. உங்கள் வாழ்க்கையில் இம்மன வளர்ச்சி, விடுவிளையாடும் இடம் பொழுதுபோக்கு ஆகிய சகலவற்றிலும் ஏற்படுகிறது. பரீட்சைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவிடும் இக்காலத்தில் மாணவர்களை அவர்களது பாடங்கள் தவிர்ந்த மற்றும் வெளிவிடயங்களில் ஈடுபடுத்தி ஊக்கமளித்து சகலதுறைகளிலும் வல்ல அறிவாளிகளை உருவாக்கத் தனியார் துறைப் பாடசாலைகள் கூடிய சேவை செய்யலாம்.

இயந்திர சாதனங்களின் உற்பத்தி பெருகப் பெருக எமக்கு ஓய்வு நேரம் அதிகமாகிறது. இங்குதான் ஒரு மாணவன் பொழுதுபோக்கு என்ற சொல்லின் அர்த்தத்தை உணரவேண்டும். அதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் அறிய வேண்டும்.”

## சின்னமடுவில் விசேஷ உற்சவம்

நாரந்தனை, வெள்ளி

பெரியமடு உற்சவ தினமான அடுத்த மாதம் 2-ம் திகதி அங்கு உற்சவம் நடைபெறுவதாலால் சரவணை சின்னமடு செபமாலை மாதா தேவாலயத்தில் உற்சவம் அன்றையதினம் கொண்டாடப்படவுள்ளது. அடுத்த மாதம் 1-ம் திகதி விசேட ஆராதனைகளும் 2-ம் திகதி திருச்சொரூப ஊர்வலமும் நடைபெறும்.

**வருடாந்த உற்சவம்**

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 28-ம் திகதி ஆரம்பமாகிறது. சுகாதாரம் போக்குவரத்து, குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலயத்துக்குவரும் யாத்திரீகர்கள் ஆலய வளவில் தங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. உற்சவம் ஆகஸ்ட்மாதம் 5-ம் திகதி திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையும்.

## இளம் பெண் தற்கொலை

பருத்தித்துறை, வெள்ளி

கரவெட்டியைச் சேர்ந்த கந்தசாமி மகேஸ்வரி என்னும் இளம்பெண் கழுத்திற் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். இப்பரிதாப நிகழ்ச்சி நேற்று நண்பகல் நடந்தது. மரண விசாரணை அதிகாரி திரு வி. பி. சுந்தரலிங்கம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். சில மாதங்களுக்குமுன் இப்பெண்ணின்து சகோதரனும் இவ்வாறே தற்கொலை செய்தமை குறிப்பிடத்தக்கது.

## இவர்களுக்கு காணி கிடைக்கவில்லையாம்

எழுதுமட்டுவாள், வெள்ளி

“விசுவமடு, ஓட்டுசுட்டான் மேட்டுக்காணிகளுக்கு படித்த வாலிபர்களிடமிருந்து இருமுறை விண்ணப்பங்கள் கோரப்பட்டு காணிகள் படித்த வாலிபர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் நாவற்குழிக் கிராமசபை எல்லைக்குள்ளிருந்து இருமுறையும் பல படித்த வாலிபர்கள் காணிக்கு விண்ணப்பித்தும் அவர்களில் ஒருவருக்காவது காணி வழங்கப்படவில்லை. எனவே இதை விட்டு நடவடிக்கை மேற்கொண்டு நாவற்குழிக்கிராமசபை எல்லைக்குள்ளிருக்கும் படித்த வாலிபர்களுக்கும் குடியேற்றத் திட்டத்தில் காணி கிடைக்க வழிசெய்ய வேண்டும்”

இவ்வாறுகோரும் மகஜரொன்றை மறவன்புலோ மேற்குச் சனசமூகநிலையம் யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு ஆணையாளருக்கும், தென்மராட்சி காரியாதிகாரிக்கும், நாவற்குழி கிராமசபை தலைவருக்கும் சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் மூலமாக அனுப்பிவைத்துள்ளது.

······

## ‘சுரண்டலை எதிர்க்க துணிவு வேண்டும்’

பருத்தித்துறை, வெள்ளி

‘பொது வாழ்வில் ஒழுக்கமும் பண்பும் இருந்தால் இன்று மக்களை எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகளான கள்ளமார்க்கட் பதுக்கல் ஆகியவற்றை ஒழித்துக் கட்டலாம். மனிதாபிமானம் படைத்தவர்கள் சமுதாயத்தில் சுரண்டல் எவ்வித உருவத்தில் இருந்தாலும் அதை எதிர்க்கும் துணிவு கொண்டிருக்கவேண்டும்.’

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. பொன். குமாரசாமி துன்னாலையில் நடந்த உடுப்பிட்டித் தொகுதி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். திரு கே. எஸ் சிதம்பரநாதன் தலைமை தாங்கினார்.

······

### கூட்டுப் பிரார்த்தனை

வேலணை, வெள்ளி

வேலணை கிழக்கு அரசடி ஆதிவைரவர் ஆலயத்தில் சென்ற வாரம் தொடக்கம் வெள்ளிதோறும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகிறது.

······

## தண்ணீர்த் தொட்டி அன்பளிப்பு

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி யாக்கருவிநாயக வித்தியாசாலைப் பிள்ளைகளின் தண்ணீர்த் தாகத்தைத் தீர்ப்பதற்காக கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த சிரேஷ்ட சுகாதார பரிசோதகரான திரு சிதம்பரநாதன் சண்முகம்பிள்ளை 14 கலன் தண்ணீர் கொள்ளக் கூடிய ஓர் அலுமினியத் தொட்டியைச் சுகாதார முறைப்படி தண்ணீர் முகர்ந்தெடுக்கக் கூடியதாக அப்பாடசாலைத் தலைமையாசிரியரிடம் அன்பளிப்புச் செய்துள்ளார்.

40 வருடத்திற்கு முன்னர் திரு. சண்முகம்பிள்ளையின் தந்தையான காலஞ்சென்ற திரு. சிதம்பரநாதன் துன்னாலை தெற்கிலுள்ள பாதிரி பள்ளிக் கூடத்திற்குச் சுமார் 3/4 மைல் தூரத்திலுள்ள நல்ல தண்ணீர்க் கிணற்றிலிருந்து நீர் அள்ளிவரத் தமது செலவில் ஒருவரை நியமித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## அறிவுவளர்ச்சிக்கு நூல் நிலையம்

தாவடி, வெள்ளி

‘மக்களின் வாழ்க்கையில் நூல்நிலையமும் இன்றியமையாததாகும். கிராமம் வளர்ச்சிபெற வேண்டுமானால் அக்கிராம வாசிகளின் அறிவு உயர்ச்சிபெறுதல்வேண்டும். நூல் நிலைய முன்னேற்றத்திற்காக இளைஞர்கள் அயராது உழைத்தல்வேண்டும்’

தாவடி மத்திய சனசமூக நிலையத்தில் நடந்த கூட்டத்தில் பேசிய ஸ்ரீ கணேச நாடக மன்றச் செயலாளர் திரு சு. கனகநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு சிவக்கொழுந்து செல்வரத்தினத்தின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில்,

பிரதம மந்திரி நாட்டிலேற்பட்டுள்ள நிலைமைகளை மிகவும் எச்சரிக்கையுடன் கண்காணித்து நடவடிக்கைகள் எடுத்ததற்காக பாராட்டுச் செய்தி அனுப்புவதெனவும், தாவடி வடக்குப் பகுதிக்கு ஒரு தபாற் பெட்டிவைக்கவேண்டுமெனவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

······

### மலேரியா பயிற்சி

உடுப்பிட்டி வெள்ளி

மலேரியா என்னும் கொடிய நோயை ஒழிப்பதற்கான தடுப்பியக்கத்தில் உலக சுகாதார ஸ்தாபனத்தால் கொழும்பிலும் குருநாகலிலும் அளிக்கப்படும் விசேஷ பயிற்சி பெறுவதற்கென கிளிநொச்சித் தொகுதியில் சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகராகப் பணிபுரியும் திரு சி. சண்முகம்பிள்ளை அழைக்கப்பட்டுள்ளார்.

······

வங்காள தேசத்துக்கு

## ஊர்வலமாகச் செல்வர்

கல்கத்தா ஜூன் 25

வங்காள தேச அகதிகளாக இந்தியா வந்துள்ள அகதிகளில் சுமார் ஒரு லட்சம் வாலிபர்களை கௌரவமாகவும் பாதுகாப்பான முறையிலும் பாதயாத்திரை ஊர்வலமாக வங்காள தேசத்துக்கு அழைத்துச் செல்ல சர்வதேச சங்கம் முடிவு செய்துள்ளது.

வங்காள மக்களுக்கு ஆதரவு திரட்ட உலக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இந்தியா திரும்பியதும் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

······

## நாரந்தனைக்கு புதிய குரவர்

நாரந்தனை, வெள்ளி

நாரந்தனை சம்பேதுருவானவர் தேவாலயத்தில் கடந்த பல வருடங்களாக கட்டளைக் குரவராகப் பணியாற்றிய அதி வண பிதா இங்கராயர் பாஷையூர்புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். அவரின் இடத்துக்குசாவகச்சேரியிலிருந்து அதி வண. பிதா எஸ். எஸ். வில்லவராசிங்கம் மாற்றப்பட்டுள்ளார்.

······

## பொன்னாலைக்கு புதிய தேர்

சுழிபுரம், வெள்ளி

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவிலுக்குப் புதிய தேர் ஒன்று அமைப்பதென்றும், இதனைக் கட்டும் பொறுப்பைச் சுழிபுரம் ஆசாரி திரு. மு. இராமசாமியிடம் ஒப்படைப்பதென்றும் தேர் சபையினர் முடிவுசெய்துள்ளனர். இந்தியச் சிற்பியின் ஆலோசனைகளும் இதற்குப் பெறப்

இன்னும் 5 ஆண்டுகளில்

# சகல பாடசாலைகளிலும் தொழிற்கல்வி போதிக்கப்படும்

## திரு. சுமதிபால தகவல்

மாவிட்டபுரம், வெள்ளி

தொழிற் கல்வியை பாடசாலைகளிலும் போதிக்க கல்வித்திணைக்களம் யோசித்து வருகின்றது. மரவேலை, உலோகவேலை, மட்பாண்டவேலை, கைவேலை ஆகியன பற்றி இன்று பாடசாலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவைகள் இலங்கையில் உள்ள சொற்ப பாடசாலைகளிலேயே போதிக்கப்படுகிறது. இன்னும் 5 வருடத்தில் சகல பாடசாலைகளிலும் இது போதிக்கப்படுவதுபற்றி ஆலோசனை செய்யப்படுகிறது.

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி உலோகத் தொழிற்சாலையை திறந்துவைத்துப் பேசுகையில் மேலதிக கல்வி நிரந்தரச் செயலாளர் திரு. கே. எஸ். எம். சுமதிபாலா தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது நான் இங்கு வரும்போது யாழ்ப்பாண மக்கள் அன்புசெலுத்துவார்கள் என்று நினைக்கவில்லை கடந்தமுறை விஜயம்செய்த சமயம் இனங்களை ஒன்றுபடுத்த தமிழர் முனைந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். இன்று இங்கு வந்தபோது சகோதரர் போல பாவித்து தமது ஆலயத்துக்கு அழைத்து சமய வழிபாட்டில் கலந்து கொள்ளச் செய்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன்.

புதிய கல்வி அமைப்பில் தொழிற்கல்வி முக்கிய இடம் பெறும் இக்கல்வி சகல மக்களுக்கும் அளிக்கப்படும்;

கல்லூரிஅதிபர் திரு எஸ் சோமசுந்தரம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

இந்த தொழில் நிலையத்தில் 294 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள் இவர்களுக்கு தளபாடங்கள் போதாமல் இருக்கிறது இங்குள்ள தேவையைப் பூர்த்தி செய்ய தளபாடங்களையும் ஒரு ஆசிரியரையும் தந்துதவவேண்டும் என்றார்

வருங்காலத்தில் ஒரு நல்ல சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு தொழில் கல்வி மேல்வகுப்பில் கட்டாயமாக இடம்பெறவேண்டும் இதை போதிக்க ஆசிரியராகிய நாம் தயாராக உள்ளோம்;

புதிய கல்வித்திட்டத்தில் தொழிற்கல்வி இடம் பெற்றால் தான் சமுதாயத்தை முன்னேற்றுவதுடன் வேலையில்லாத்திண்டாட்டமும் நீங்கி நாட்டைவளப்படுத்தத்தக்க பொருளாதார நிபுணர்களை உருவாக்கலாம் என்று அவர் மேலும் சொன்னார்.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உபதலைவரும் காங்கேசன் துறைப்பட்டின சபைத்தலைவருமான இ. குருசாமி பேசுகையில்:

இன்று போதிக்கப்படும் கல்வியால் சமுதாயம் சீர்பெறாது மற்றும்பாடங்களை விட தொழிற்கல்வியளித்தால் தான் சமுதாயம் முன்னேறும் என்றார்.

கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். சிவப்பிரகாசம் பேசுகையில் இது காலம் வரையில் மாணவர்கள் பெற்று வந்த ஏட்டுக்கல்வியால் பிரயோசனம் இல்லை. தொழிற்கல்வியை வளர்க்க பல தொழில்கூடங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றார்

கல்லூரி வாசலில் இருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட கல்விமேலதிக நிரந்தரச் செயலாளர் திரு. எம். சுமதிபாலா கல்லூரி ஆலய விசேட பூசையில் கலந்து கொண்டார்.

### பாராட்டத்தக்கது

அரசாங்கம் பாடசாலை அபிவிருத்திக்கு பொருள்களையும் பணத்தையும் வழங்கவேண்டியது கடமை நிதிநிலைமை சரியில்லாததால் பாடசாலை அபிவிருத்திக்கு ஒதுக்கும் பணம்சொற்பமாகவுள்ளது. சொற்பமாக வழங்கிய போதும் பெற்றோர்கள் நிதி உதவி இந்நிலையத்தை நிர்மாணித்தது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் பிள்ளைகளுக்கு தொழிற் கல்வியளிக்க இங்கு மேற்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது.

1972-ம் ஆண்டு ஜனவரி முதல் தொழிற்கல்வியை பெருக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது. ஆசிரியபயிற்சி கலாசாலைகளிலும் தொழிற் பயிற்சி போதிக்கப்படவிருக்கிறது. ஒரு தொழிற்பயிற்சி கலாசாலையில் தொழிற்கல்வி பற்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது பலாலி ஆசிரியபயிற்சி கலாசாலை மேலும் தொழிற்கல்வி பெறத்தக்கதாக விஸ்தரிக்கப்படும் இங்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படலாம்

கொழும்பு கோப்பாய் கலாசாலைகள் விஸ்தரிக்கப்பட்டு கூடிய ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

## இவர்களுக்கு இடமாற்றமில்லை

சுழிபுரம், வெள்ளி

சுகாதார இலாகாவில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான வருடாந்த இடமாற்றம் இந்த ஆண்டு நடைபெறமாட்டாது. இது சம்பந்தமாக சுகாதார சேவை அதிபர் சுற்றறிக்கையொன்றை சகல அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

### மல்லி

எழுதுமட்டுவாள், சனி

சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கூப்பனுக்கு 2 அவுன்ச வீதம் பவனையாளருக்கு மல்லி வழங்கவேண்டுமென கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அதன் கீழ் இயங்கும் சகல சங்கங்களுக்கும் அறிவித்துள்ளது.

---

கொய்யாத்தோட்டம்

## கிறீஸ்துராசா உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம் கிறீஸ்துராசா ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதிநாள் திருவிழா இன்று நடைபெறுகின்றது. இன்று மாலை யாழ் ஆயர் திவ்விய நற்கருணை ஆராதனையை நடத்தி ஆசிர்வாதமும் வழங்குவார்.

நாளைக்காலை வைபவத் திருப்பலி விருந்தும் மாலை திருச்சொரூப பவனியும் நடைபெறும். உற்சவம் இம்மாதம் 20-ம் திகதி ஆரம்பமானது.

சிறந்த
அச்சுவேலைகள்
‘ஈழநாடு’
வர்த்தக அச்சகப்பகுதி
யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

மனிதன் புலனடக்கத்தை அனுஷ்டிக்கக் கூடியவனுயிருப்பதால்தான் மனிதனுகிறுன்; புலனடக்கத்தை அனுஷ்டிக்குமளவிலேயே மனிதனுகிறுன்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelan du National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் ஆனிமாதம் 12 - ந் திகதி (26 - 6 - 71)


## மிகச்சிறந்த கல்விமான்

வாழ்க்கைக்கும் நடத்தைக்கும் தொடர்பில்லாத ஒருவருடைய வார்த்தைகளுக்கு மதிப்பில்லை. இது குழந்தைகளுக்குக்கூடத் தெரிந்த உண்மை. ஆனால் வார்த்தைகள் உள்ளத்திலிருந்து இதயசுத்தியோடு, நேர்மையாக வெளிவரும்போது அவற்றினுல் ஏற்படக்கூடிய எந்த விளைவுகளையும் அவர் ஏற்றுக்கொள்ளத்தயாராக இருக்கும்போது அந்த வார்த்தைகள் மனிதனின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் சக்திபெறுகின்றன.

நாட்டின் பழமை வாய்ந்த தேசியக் கல்விநிறுவனங்களில் முதன்மையான கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றும்பெருமையைப்பெற்ற அக்கல்லூரியின் முதல் பழைய மாணவரான திரு. எஸ். ஏ. விஜயதிலகாவின் மறைவைக்கேட்டு அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தவும் நேற்றுமுன்தினம் அவரது இறுதியாத்திரையிலும் ஈமச்சடங்கிலும் கலந்துகொள்வதற்கு ஆயிரக்கணக்கில் பழைய மாணவர்கள் திரண்டுவந்ததற்கும் "உள்ளத்திலே ஒளியுண்டானுல் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்ற உண்மையை தமது வாழ்க்கை மூலம் உணர்த்தியவர் என்பதை எடுத்துக்காட்டுகிறது. புயல் சூழ்ந்து வரும்போது பெரும்பான்மையோடு சேர்ந்து பாடுவது அல்லது மௌனமே நல்லது என்று கோழைத்தனமாக ஒதுங்கிவிடுவது பலருடைய வழி. போதிப்பவர்கள் உண்மையைப் பற்றி அவர்கள் காண்பதைச் சொல்வார்களே தவிர வாழ்ந்துகாட்ட முனையமாட்டார்கள். மனித வரலாற்றின் கீர்த்தி உலகைவென்ற நெப்போலியன், ஹிட்லர் போன்றவர்களில் அல்ல எதற்கும் தனது சுதந்திரத்தை இழந்துவிட விரும்பாதசோக்ரட்டீஸ், மகாத்மாகாந்தி போன்றவர்களில்தான் தங்கியிருந்தது; தங்கியிருக்கிறது.

காலஞ்சென்ற திரு. எஸ். ஏ. விஜயதிலகா தமதுசொல்லாலும் செயலாலும் சோக்ரட்டீஸ், காந்தி மகாத்மாவின் வழியைக் கடைப்பிடித்து வாழ்ந்த பெரியார்.

கல்வி உலகிலும்சரி, அரசியல் உலகிலும் சரி திரு. விஜயதிலகா சிறுபான்மையினரதும், வசதிகுறைந்த ஒடுக்கப்பட்ட மக்களினதும் உரிமைகளை எப்போதும் தீவிரமாக ஆதரித்துவந்தார்.

பொதுவாக வாய்ப்பும் வசதியுமுள்ள பாடசாலைகளின் நலனையே பாதுகாக்கும் தன்மையுடைய இலங்கைத் தலைமைமாசிரியர்கள் மகாநாட்டின் தலைவராக திரு. விஜயதிலகா பணியாற்றியபோது இலவசக் கல்வி பற்றியும் சுயபாஷை மூலம் கல்வி போதனையளிப்பது பற்றியும் எவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவகையில் நியாயமான முறையில் தனது கருத்துக்களை வெளியிட்டார். முன்னரிவிட்ட சமூகத் தவறுகளைத் திருத்துவதற்கு இலவசக் கல்விதான் சரியான மார்க்கம் என்பதை எடுத்துக்கூறிய திரு. விஜயதிலகா, அதே சமயம் அதையொட்டி தேவையற்ற வீண் செலவுகள் பற்றி எச்சரித்ததுடன் இவைவருங்காலத்தில் பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி இலவசக் கல்வித் திட்டத்தின் நற்பெயரையேகெடுத்துவிடுமென்றும் அப்போதே எச்சரித்திருந்தார்.

சுயபாஷை மூலம் கல்வி போதிக்கப்படவேண்டுமென்ற யோசனைக்கு சொந்த நலன்கருதி சிலர் பலத்த எதிர்ப்புக்காட்டியபோது, திரு விஜயதிலகா தாம் கற்ற ஆங்கில, லத்தீன்மொழிகளின் அறிவைத் துணைக்கொண்டு சுயபாஷைக்களிக்காக வாதாடினுர். கல்வியின்தரத்தை உயர்த்துவதற்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டுமென வாதாடிய அதே சமயம் ஆங்கிலேயர்களின் நடை உடை பாவனைகளிலும் நாகரிகத்திலும் மோகம் கொள்வதை "அடிமை மோகம்" எனக் கண்டித்து வெறுத்தொதுக்கினுர். "சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய நாம் இலங்கையர் அனைவரும் நமக்கென பல நூற்றுண்டு காலம் பண்பாடும் நாகரிகமும் கொண்டவர்கள். இவற்றைமறந்து அந்நியரின் பழக்க வழக்கங்களைப்பின்பற்றுவது உண்மையில் அடிமைத்தனத்தின் சின்னமாகும்" என்று அவரது வார்த்தைகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

மொழியுரிமை உட்பட தமிழர்களினதும் இதர சிறுபான்மைமக்களினதும் உரிமைகளுக்காக சிறிதும் தயக்கமின்றித்துணிவுடன் குரல் எழுப்பிய இப்பெருமகனுரை, பெரும் கல்விமான் என்றமுறையில்மட்டுமல்லாது மனிதாபிமான முள்ள தேசாபிமானி என்ற வகையிலும் இந்நாட்டுமக்கள் மறக்கமுடியாது.

அரசியல் ஆதிக்கப் போட்டியும் அரசியல் சந்தர்ப்பவாதமும், தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையூருக இருக்கிறதேயென்ற கவலை திரு. விஜயதிலகாவுக்கு அவரதுகடைசிக் காலத்தில் பெருந்துயரைக் கொடுத்திருக்கும்.

# ‘நாயன்மார்கட்டு குளத்தை நீச்சல் தடாகமாக்க வேண்டும்’

யாழ்ப்பாணம், சனி

‘பல்வேறு வட்டார மக்களாலும் விரும்பி நீச்சல் தடாகமாக உபயோகிக்கப்பட்டு வரும் ஒரு தலைசிறந்த தடாகம் நாயன்மார்கட்டு தடாகமே. இக்குளம் சரித்திரப்பிரசித்தி வாய்ந்தது ஆதலால் இந் நாயன்மார்கட்டு தடாகத்தை ஆழமாக்கி அணைச்சுவர் கட்டி விவசாயம் செய்யவும் நீச்சல் தடாகமாகவும் உபயோகிக்கக் கூடியதாக அமைக்கவேண்டும்’

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொதுக்கூட்டத்தில் திரு என். மார்க்கண்டு கொண்டுவந்த மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நேற்று நடந்த இக்கூட்டத்தில் திரு. என், மார்க்கண்டு கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேறின.

வட்டாரங்கள் தோறும் இருக்கும் சனசமூக நிலையங்களில் சிரமதான இயக்கங்களை நிறுவி அவ்வட்டாரங்களிலும், மாநகரசபை பொது வைபவங்களிலும் சிரமதான வேலைகள் செய்து மாநகர எல்லைப்பகுதியை நல்ல முறையில் திருத்தியமைக்க இச்சபை வருடந்தோறும் கொடுக்கும் நன்கொடை ரூபா 100ஐ ஒரு பகுதியை சிரமதான இயக்கத்திற்குக் கொடுத்துதவ வேண்டும்.

நல்லூர் முத்திரைச் சந்தையில் கல்விச் சந்தோர் கட்டும் பொருட்டு எடுத்த காணி இன்னும் பல வருடங்களாக அப்படியே இருக்கின்றது. இக்கல்விச்சந்தோர் கட்டும்போது அவர்களுக்குக் கொடுப்பதாகவும் அதுவரைக்கும் அப்பகுதி விளையாட்டு இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானமில்லாதபடியால் அவ்விடத்திலுள்ள வேலியை அகற்றி மரங்களை வெட்டி விளையாட்டு மைதானமாக்கவேண்டும்.

அமைச்சருக்கும் அரசாங்க அதிபருக்கும்

# நன்றி தெரிவிக்கும் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், சனி

நாட்டின் போக்குவரத்து வசதிகள் பெரும் குழப்பமான நிலையில் இருந்த காலகட்டத்தில் நாட்டின் இப்பாகத்திலுள்ள நுகர்வோருக்கு சகல அத்தியாவசிய பொருட்களையும் வழங்குவதில் அளித்த சகல சாத்தியமான உதவிகளுக்கும் தபால் தந்தி அமைச்சர் குமாரசூரியருக்கு நன்றியறிதலை தெரிவிப்பதென திரு. கே. எஸ். நடராசா கொண்டுவந்த தீர்மானம் யாழ் மாநகரசபைக்கூட்டத்தில் நிறைவேறியது. இத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக திரு. எஸ். நாகராசா கூறினுர்.

திரு கே. எஸ். நடராசா கொண்டுவந்த கீழ்காணும் தீர்மானங்களும் சபையில் நிறைவேறின. நாடு நெருக்கடி நிலையில் இருந்த காலகட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் கண்டிப்பாகப்பேணி சமாதானத்தை நிலைநாட்டியதன் மூலம் தீவின் இப்பாகத்து குடிமக்களது உயிர்களைப் பாதுகாப்பதில் தேவைப்பட்ட சகல சாத்தியமான பாதுகாப்புக்களையும் மேற்கொண்டமைக்காக இளைஞரும் ஆற்றல் மிகுந்தவருமான எமது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க முகவர் திரு. விமல அமரசேகராவிற்கு நன்றி தெரிவிப்பதென இச்சபை தீர்மானிக்கப்பட்டது.

## வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை தெரிவித்தபோது ஏற்றுக் கொண்டிருந்தார்கள் என்றுர்.

திரு. மார்ட்டின் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சோஸலிச நாடுகளில் உள்ளதுபோல தமிழ்மொழியும் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமென்பதை திரு பீட்டர் கெனமன் போன்றவர்களும் முன்னர் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஏற்றிருந்தவர்கள், சிங்களத்தை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள மறுப்பது ஏன் என்று சிலர் கேட்கலாம். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில், ஆங்கிலம் ஆட்சிமொழியாக திணிக்கப்பட்டது.

இந்தநாட்டில் வாழும் இருபகுதியினரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமானுல் சுயகௌரவத்துடன் வாழ வேண்டுமானுல் மொழிப் பிரச்னையில் சமரச உடன்பாடு வேண்டும். சிங்கள தமிழ் மக்களின் சமரசத்துடனேயே இப்பிரச்னையைத் தீர்க்கலாம் என்றுர்.

உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம் பேசுகையில், சமரச உடன்பாட்டினுல் எதுவித பயனும் ஏற்படாது என்றும், புதிய அரசியலமைப்பில் மொழிப் பிரச்னைக்கு முழுமையான தீர்வு காண வேண்டும் என்றும் சொன்னுர்.

இதற்கு முன்பு தமிழரசுக் கட்சியினரும், திரு. பண்டாரநாயக்காவும் மொழிப் பிரச்னையில் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். ஐ. தே. கட்சியினருடனும் உடன்பாடு செய்தோம். ஆனுல் இவை தற்காலிகமானவை: இதனுல் எதுவித பயனும் ஏற்படவில்லை. தற்காலிக உடன்பாட்டுக்கு இடமில்லை. அரசியல் திட்ட அமைப்பில் இதற்குதீர்வுகாணவேண்டும். இதுவரை செய்யப்பட்ட உடன்படிக்கை அரசாங்கங்களை அமைப்பதற்காகவே எடுக்கப்பட்ட உடன்படிக்கைகள். இப்போது சமரச உடன்பாட்டுக்கு இடமில்லை" என்றுர்.

ஆனாலும் பேராசிரியரும், உண்மைத் தேசியவாதியுமான பெருமகனுக்கு அஞ்சலி செலுத்தும் அதேசமயம் அவரது தேசிய ஒருமைப்பாட்டுக் கனவு அவர் விரும்பியபடி நிறைவேறவில்லையே யென்று மனந்தளரக் கூடாது.

"சாவு என்னவென்பது எனக்குத்தெரியாது! அது ஒருவேளை நல்லதாகவும் இருக்கக்கூடும். ஆனாலும் அதற்கு நான் அஞ்சவில்லை என்றுலும் ஒருவன் தனது நிலையிலிருந்து விலகுவது கூடாதென்பது எனக்குத் தெரியும் எனவே எனது நிலையிலிருந்து விலகுவதைவிட மரணத்தையே விரும்புகிறேன்" என்று ஞானி சோக்ரட்டீஸ் கையில் நஞ்சுக்கோப்பையுடன் கடைசிநேரத்தில் [illegible] கொள்வது பொருத்தமாகும்.

## மரண அறிவித்தல்

### யோகானந்தன்

முருகமூர்த்திவீதி வண்வட மேற்கில் வசிக்கும் ஆசிரியர் தம்பிராசா வாலாம்பிகை அவர்களின் அருந்தவப் புதல்வனும் வாமதேவன், இந்ராதேவி, சோமேஸ்வரிதேவி, குகதாசன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆகிய யோகானந்தன் நேற்று காலமானுர். அன்னரின் ஈமச்சடங்குகள் இன்று (சனிக்கிழமை) பிற்பகல் 3-30 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன். தம்பிராசா ஆசிரியர். 3212

## உதவி

கோட்டை, வெள்ளி

நாட்டின் பல பகுதிகளிலும் வேலைக்குப் போகும் தாய்மார்களுக்கும் பாடசாலைக்குப் போகாத குழந்தைகளுக்கும் உதவி புரியும் வகையில் பெரிய திட்டம் ஒன்றினை விரைவில் சமூக சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கவிருக்கின்றது.

இதுசம்பந்தமாக விரைவில் நாடு முழுவதிலும் ஏராளமான குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று தெரிகின்றது.

## சரவணை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் சந்தேகநபரை ஆஜர்செய்யும்படியும் பதில் நீதிபதி உத்தரவிட்டார்


# நல்லூர் சிவன்கோவில்

## ஆனி உத்தர விஞ்ஞாபனம்

நிகழும் விரோதிகிருது வருஷம்
ஆனி மாதம் 16-ந் திகதி (30-6-71)புதன்கிழமை காலை 4-15 மணியளவில் அபிஷேக ஆரம்பமும் காலை 7-15 மணியளவில் உற்சவமும் நடைபெறும்.

முன் பிரசுரித்த உற்சவ விஞ்ஞாபனத்தில் பிரசுரித்தபடி காலை 8-00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகமாட்டாது.

நல்லூர் சிவன்கோவில் தேவஸ்தானம்.

2868 25-6-71


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org